## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில் உள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை நிரப்புதல் – இனச்சுழற்சி முறையை பின்பற்ற ஆணையிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7(1)) துறை

அரசு ஆணை (நிலை) எண்.142 நாள்: 06.07.2010.

திருவள்ளுவர் ஆண்டு 2041

ஆனி 22

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.149, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத் (சஉ.தி.2) துறை நாள் 20.11.2009.

2. நீதிப்பேராணை மனுக்கள் எண். (W.P.Nos) 10748 / 2009, 3840 முதல் 3842 வரை, 3950, 5116, 5117 மற்றும் 6645 /2010 மற்றும் பல்வகை மனுக்கள் (M.P.Nos) 1 மற்றும் 2 / 2009, மற்றும் 1/2010 ஆகியவற்றில் சென்னை உயர்நீதிமன்றம் 19.04.2010 அன்று வழங்கிய தீர்ப்புரை.

**ஆணை:**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழந்தைகள் மையங்களில் உள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து புள்ளி விவரங்கள் பெறப்பட்டு, ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

2. அவ்வாறே, மேற்கண்டப் பதவிகளில் காலியாக இருந்த 13753 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

3. மேற்காணும் ஆணையின்படி தமிழகம் முழுவதும் உள்ள சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பள்ளிகளில் உள்ள சத்துணவு மையத்தின் சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கு மட்டும் இனசுழற்சி முறை கடைப்பிடிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

4. இந்நிலையில் தனியர்கள் சிலர் குழந்தை மைய பணி நியமனத்தில் இனசுழற்சி முறையை பின்பற்றி தங்களை அங்கன்வாடி உதவியாளர்களாக நியமனம் செய்ய வேண்டி, சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் எண் (W.P.Nos) 10748 / 2009, 3840 முதல் 3842 வரை, 3950, 5116, 5117 மற்றும் 6645 /2010 மற்றும் பல்வகை மனுக்கள் எண் (M.P.Nos) 1 மற்றும் 2 / 2009, மற்றும் 1/2010 ஆகியவற்றை தாக்கல் செய்தனர். மேற்காணும் மனுக்களின் மீது சென்னை உயர்நீதிமன்றம் 19.04.2010 அன்று பின்வருமாறு தீர்ப்புரை வழங்கியுள்ளது:-

> "In the Light of the above, this court has no hesitation to reject the stand taken by the respondent State and by giving a positive direction to provide for Reservation in terms of Tamil Nadu Act 45/ 1994, and also in the light of the interim order dated 20.04.2004 passed by the Supreme Court in W.P.(C) No.196 of 2001 in People's Union for Civil Liberties, Rajasthan Vs. Union of India and to provide for reservation for SC/STs. Till such time they provide such rules of reservation, the State is forbidden to fill up such large number of posts (as many as 20000 posts) without due representation to SC/ST Communities ignoring the Constitutional mandate".

5. சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள மேற்காணும் தீர்ப்பினை ஏற்றுக் கொண்டு அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

அ. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மையங்களில் உள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சமையலர், உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கும் நேரடி நியமனம் செய்யும் போது இனச்சுழற்சி முறையிலான இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்ற வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர் நியமனத்தில் ஏற்கனவே கடைபிடிக்கப்பட்டு வரும் இனச்சுழற்சி முறையிலான இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

இ. மேற்காணும் அனைத்து பணியிடங்களுக்கும் மாவட்டத்தினை ஓர் அலகாகக் கொண்டு இனச்சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும்.

ஈ. இனசுழற்சி முறை கடைபிடிப்பது தொடர்பாக பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறையால் அவ்வப்போது வெளியிடும் ஆணையை கடைபிடிக்க வேண்டும்.

6. மேற்காணும் ஆணைகளைத் தவறாமல் செயல்படுத்துமாறு துறைத்தலைவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/ஆளுநரின் ஆணைப்படி/

பா. இராம மோகன ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

1. ஆணையர், சமூக நலத்துறை, சென்னை–5.
2. முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை–113.
3. ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
4. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்

1. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி) துறை, சென்னை–9.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
3. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
4. தலைமை அரசுத் துறை நிறுவன தணிக்கையர், சென்னை – 2.
5. இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

6/7/10
பிரிவு அலுவலர்